**O.S. No.214/2018**
P.W.1 - திருமதி.ஹேமலதா
**நாள் : 12.11.2025.**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

நான் நிரூபணவாக்குமூலத்தை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்துள்ளேன். நிரூபணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால், எனது கணவர் சொல்லி தெரியும். வழக்கு சொத்தை கிரையம் முடித்துக்கொள்ள தயாராக இருக்கிறேன் என்று பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினாரா என்றால், எனக்கு தெரியாது. எனது கணவர் நேரடியாக பிரதிவாதியிடம் சென்று எந்த தேதியில் கிரையம் முடித்துக்கொள்ளமாறு கேட்டாரா என்றால், கேட்டார்கள், ஆனால், எந்த தேதி என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தின் கிரைய தொகை எவ்வளவு என்றால், ரூ.24,79,500/- ஆகும். தாவா சொத்தின் மொத்த கிரைய தொகை ரூ.44,02,020/- என்று பேசி முடிக்கப்பட்டது என்றால், சரியல்ல. எனது கணவர், பிரதிவாதிக்கு முன்பணம் ரூ.15,00,000/- கொடுத்ததை வட்டியுடன் கேட்டு தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது கணவர் போட்ட கிரைய ஒப்பந்த பத்திரத்தில் வட்டி பிரதிவாதி கொடுக்க வேண்டுமென்று வாசகம் காணப்படவில்லை என்றால், சரிதான். எனது கணவருக்கு மதுரை குட்செட் தெரு ஆக்சிஸ் வங்கியில் கணக்கு இருந்தது என்றால், சரிதான். தாவா சொத்தின் மொத்த கிரைய தொகை ரூ.44,02,020/- பேசி முடிக்கப்பட்டது என்றும், எனது கணவர் முன்பணமாக ரூ.15,00,000/- பிரதிவாதியிடம் கொடுத்தார் என்றும், மீத தொகைக்கு ஆக்சிஸ் வங்கியின் காசோலைகளாக ரூ.7,25,000/-, ரூ.6,00,000/- மற்றும் ரூ.6,00,000/- கொடுத்தார் என்றால், சரியல்ல. எனது கணவர் நிரப்பப்படாத காசோலைகள் தான் பிரதிவாதியிடம் கொடுத்திருந்தார். மேற்படி காசோலைகளை எனது கணவர் கடைசி வரை வங்கியில் வசூலுக்கு போடச்சொல்லவில்லை என்றால், எனக்கு தெரியாது. எனக்கு வழக்கு சம்மந்தமாக நேரடியாக எதுவும் தெரியாது காரணத்தினால் தான்

முன்னுக்கு பின்னாக கேள்விகளுக்கு தெரியாது என்று பதில் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி தாவா கிரைய ஒப்பந்தம்படி கிரையத்தை முடித்துக்கொள்ள தயாராக இருந்தார் என்றும் எனது கணவர் தான் காசோலை மூலம் பணம் செலுத்தாததால் கிரையத்தை முடித்து கொள்ள இயலவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் கணவர், பிரதிவாதி மீது மத்திய குற்றபிரிவு மதுரையில் புகார் கொடுத்து அந்த புகாரின் அடிப்படையில் குற்ற எண்.7/2016 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது கணவர் செல்வாக்குரிய நபர் என்பதால் தான் பிரதிவாதி மீது பொய்யான ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கு சம்மந்தமாக விபரங்கள் நேரடியாக தெரியாது என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

S/d – S.John Sundarlal Suresh, B.Sc., M.L.,

IV Additional District and Sessions Judge, Madurai.